بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 19.09.14 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 19, September 2014 (Tamil)**

## இன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை அன்பர் (ஆகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ் ஸலாம்) அவர்களுடைய அன்பர்களின் கடமை, ஈமானின் வேர்களை உறுதிப்படுத்துவதுடன் உலகை இஸ்லாத்தின் அழகின் பக்கம் ஈர்க்கக் கூடிய, உலகிற்கு அருளை வழங்கக் கூடிய நற்செயல்கள் எனும் அழகிய இலைகளாக, கிளைகளாக கனிகளாக மாறுவதாகும்

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

''அல்லாஹ் திருக்குர்ஆனில் ஈமானுடன் அமலே சாலிஹ் (நற்செயல்)களையும் (நிபந்தனையாக) வைத்துள்ளான். அமலே சாலிஹ் (நற்செயல்) என்பது, எதில் ஓர் அணுவளவு கூட குழப்பம் இருக்காதோ அதற்குக் கூறப்படும். மனிதனின் செயலில் எப்போதும் திருடன் ஒளிந்திருக்கிறான் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். அவை என்ன? காட்டுதல்.''

அதாவது மனிதன் பிறகுக்குக் காட்டுவதற்காக ஒரு செயலைச் செய்கிறான்.

''இதில் விந்தைக்குரிய விஷயம் என்னவெனில், அவன் அதில் மகிழ்ச்சி கொள்கிறான்.''

அதாவது தன்னலத்தைக் கொண்ட மகிழ்ச்சி.

''இதனால் மேலும் பலவிதமான தீமைகள் பாவங்கள் வெளிப்படுகின்றன. அவற்றால் செயல்கள் வேணாகி விடுகின்றன. உறுதியான எண்ணத்துடனும், வலுவான உறுதிப்பாட்டுடனும் செயல்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். உறுதியாகவும், வலுவாகவும் உறுதிமொழி எடுங்கள்.''

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** ஈமானை ஒரு மரத்துடன் ஒப்பிட்டுக் குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

**''ஈமான் ஒரு மரத்தைப் போன்றதாகும். உயர்விலும் உயர்வான மரத்தை பயனுள்ளதாக ஆக்குவதற்கு அதனை கவனிக்க வேண்டியது வருகிறது. அதனை கவனிக்கும்போதுதான் அது உயிருள்ளதாக இருக்கிறது. அவ்வாறே ஈமானை முழுமையாக்குவதற்கும் செயல்களின் தேவை இருக்கிறது. தனது ஈமானை செயல்களின் மூலமாக பாதுகாக்க வேண்டிய தேவை இருக்கிறது.**ஏனெனில் இது இல்லாமல், ஈமான் இருந்தாலும் அல்லது ஈமான் இருப்பதாக வாதம் செய்தாலும் அந்த மனிதர் ஈமான் கொண்டவர் என்று அழைக்கப்பட முடியாது. செயல் இல்லாத மனிதன், அழகிய பசுமையான கிளைகள் வெட்டப்பட்டு வடிவம் சீர்குலைக்கப்பட்ட மரத்தைப் போன்றவனாவான். அதன் கனிகள் வீணாக்கப்பட்டு விடுகின்றன; அதன் நிழல் தரும் கிளைகளிலிருந்து இறைவனின் படைப்பினங்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளன. எனவே கிளைகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட, எவ்வித பலனையும் தராத அப்படிப்பட்ட மரத்தின் பக்கம் எவரும் பார்க்க மாட்டார். எவருக்கும் அதன் பக்கம் கவனம் செல்லாது.பச்சைப் பசுமையாக இருக்கின்ற அழகிய செடியின், மரத்தின் பக்கம் ஒவ்வொருவரின் பார்வையும் படும்; அதன் பக்கம் கவனம் செல்லும். எந்த மரம் அழகானதாக இருக்கின்றதோ, மலர்களாலும், கனிகளாலும் நிறைந்து காணப்படுகிறதோ, கோடைக் காலத்தில் நிழல் தரக் கூடியதாக இருக்கிறதோ அதனையே மக்கள் விரும்புகின்றனர். எனவே சந்தேகமின்றி, ஈமான் என்பது வேரைப் போன்றதாகும். ஒரு முஸ்லிம்,

எனது ஈமான் உறுதியானது என வாதிக்கின்றார். பெரும்பாலான முஸ்லிம்கள் இதனைக் கூறுவதை நாம் பார்க்கிறோம். பலர் மார்க்கம் தொடர்பாக தன்மான உணர்வையும் கொண்டிருக்கிறார்கள். இஸ்லாத்தின் பெயரால் கொலையுண்டு போவதற்கும், கொலை செய்வதற்கும் ஆயத்தமாகி விடுகிறார்கள். ஆனால் உலகிற்கு பயன் அளிக்கக் கூடிய அழகிய மரமாக அல்லது தோட்டத்தைப் போன்று இருக்கின்றாரா? அவருடைய அழகைப் பார்த்து மக்கள் அவர் பக்கம் ஈர்க்கப் படுகின்றனரா? ஹஸ்ரத் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கம் எதிரிகளையும் தன் தன் பக்கம் ஈர்த்து நண்பனாக்கி விட்டது மட்டுமல்லாமல், கடுமையான அன்பில் சிறைப் பிடித்து விட்டது. அந்த முஸ்லிம்களுக்கு இந்த மதிப்பு ஏன் இருந்ததென்றால், அவர்களுடைய ஈமானுடன் அவர்களின் ஒவ்வொரு செயலும் அருளை வழங்கக் கூடியதாக இருந்தது. எனவே அமலே சாலிஹ் எனும் நற்செயல்களின் பச்சைப் பசுமையான கிளைகள் மற்றும் கனிகளின் அழகு தென்படாத வரை வெறும் ஈமான் பற்றிய வாதம், அதனை வெளிப்படுத்துதல், அது ஆழமாக வேரூன்றி இருக்கிறது என்ற வாதங்களால் எந்தப் பயனுமில்லை. இந்த அழகு வெளிப்படும்போது அருள் கிடைக்கும்போது பிறகு உலகமும் கவனம் செலுத்துகிறது. அதனைச் சுற்றி ஒன்று கூடியும் விடுகிறது. அதனை பாதுகாப்பதற்கும் முயற்சி செய்கிறது.''

எனவே அல்லாஹ் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஈமானில் உறுதியாக இருங்கள் என்று மட்டும் கூறவில்லை; மாறாக, ஈமானைப் பற்றிக் குறிப்பிட்ட அனைத்து இடங்களிலும் அநேகமாக அதனை அம்லே சாலிஹ் எனும் நற்செயலுடன் இணைத்துக் குறிப்பிட்டுள்ளான். மேலும் இந்த நிலைமையை உருவாக்குவதற்காக அல்லாஹ் உலகில் நபிமார்களையும் அனுப்புகிறான். காலத்தின் நபியுடன் தொடர்பு ஏற்படும்போதுதான் நம்பிக்கை கொண்டவர்களுக்கு இந்த நிலை உருவாகிறது. எந்த மார்க்கம் முஸ்லிம் அல்லாதவர்களின் அன்பையும் ஈர்த்ததோ முஸ்லிம்களின் ஆட்சிகளைப் பாதுகாப்பதற்காக முஸ்லிம் அல்லாதவர்களும் முஸ்லிம்களின் சார்பாக போர் செய்ய ஆயத்தமாகி விட்டார்களோ அ(ந்)த(மார்க்கத்தி)ன் (தற்போதைய) நிலை என்னவென்றால், மற்றவர்களை ஈர்ப்பது ஒருபுறமிருக்கட்டும்; நற்செயல்களின் குறைபாட்டின் காரணமாக முஸ்லிகளின் ஒருவருக்கொருவருடனான நிலை, *குலூபுஹும் ஷத்தா* (அவர்களின் உள்ளங்கள் சிதறிக் கிடக்கின்றன 59:15) என்ற காட்சியை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறது. அவர்களின் உள்ளங்கள் சிதறிக் கிடக்கின்றன. இன்று அந்த சரியான செயல்களின் வடிவத்தை எடுத்து வைப்பது காலத்தின் இமாமையும் நபியையும் ஏற்றுக் கொண்ட ஒவ்வோர் அஹ்மதியின் பணியாகும். அஹ்மதிய்யா ஜமாஅதுதான் அல்லாஹ்வால் நடப்பட்ட மரமாகும். அதன் வேர்கள் உறுதியானவையாகும். அதன் கிளைகளும் அழகானவையும், பச்சைப் பசுமையானவையும் கனிகளைக் கொண்டவையும் ஆகும். அவை தன் பக்கம் ஈர்க்கின்றன. மேலும் இவையெல்லாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு உண்மையான இஸ்லாத்தின் போதனையைப் பற்றி அடையாளம் காண வைத்ததனாலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின்படி செயல்பட நமக்கு கவனமூட்டியதனாலுமாகும்.

ஆப்பிரிக்காவில் ஓரிடத்தில் (நமது) பள்ளிவாயில் திறப்பு விழா நடந்தது. அங்குள்ள சீஃப் கிறித்தவராக இருந்தார். அவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவரும் கலந்து கொண்டார். அவர் கூறினார்: **நான் உங்கள் மீதுள்ள அன்பினால் இங்கு வரவில்லை. இந்த காலத்தில் தனது பள்ளிவாயில் திறப்பு விழாவின்போது ஒரு கிறித்தவரையும் அழைக்கின்ற இந்த முஸ்லிம்கள் யார்? என்பதை பார்க்க மட்டுமே வந்தேன். இங்கு வந்து எனக்கு மிகவும் வியப்பு ஏற்பட்டது. இங்கு பல்வேறுபட்ட மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்று கூடியிருக்கிறார்கள். மேலும் அஹ்மதிகள் முஸ்லிகளாக இருந்தும் இந்த அளவுக்கு அருமையான, நிகரற்ற, உயர்ந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துகிறார்கள்.**

ஆக. இப்படிப்பட்ட மரங்களாக இருக்கிறார்கள். இவர்களைப் பற்றித்தான் திருக்குர்ஆன் அதன் வேர்கள் பூமியில் உறுதியாக இருக்கின்றன என்றும் மனிதர்களை மரங்களுடன் ஒப்பிட்டுக் கூறியவாறு ஈமான் மற்றும் நற்செயல்களின் காரணமாக அவற்றின் கிளைகளும் வானத்தில் உயர்வுகளை தொட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் கூறியுள்ளது. (14:25) எனவே நான் கூறியது போன்று, காலத்தின் இமாமின் காரணமாக ஒவ்வோர் அஹ்மதியின் கடமை என்னவென்றால், ஈமானின் உறுதியுடன் பசுமையான கிளைகளாக மாற வேண்டும். பசுமையான மரங்களின் அழகிய இலைகளாக மாற வேண்டும். அவற்றின் மீது உருவாகும் அழகிய மலர்களாகவும் கனிகளாகவும் மாற வேண்டும். அவை உலகிற்கு அழகானவையாக தென்படுவது மட்டுமல்லாமல் பயனளிப்பவையாகவும் இருக்க வேண்டும். மேலும் எல்லா விதமான குழப்பங்களிலிருந்தும், புறம்

பேசுவதிலிருந்தும், பிறரை அற்பமாக பார்ப்பதிலிருந்தும், கருணையிலிருந்து விலகி இருப்பதிலிருந்தும், நன்மை செய்து விட்டு பிறகு அதனை சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பதிலிருந்தும் நாம் விலகி இருக்க வேண்டும். அவற்றிலிருந்து நாம் நம்மை பாதுகாக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். உயர்ந்த பண்புகளை வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

திருக்குர்ஆன் நமக்கு உயர்ந்த ஒழுக்கங்களைப் பேணுமாறும் நற்செயல்களைச் செய்யுமாறும் மீண்டும் மீண்டும் அறிவுறுத்திக் கொண்டிருக்கிறது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் உங்கள் செல்வங்களையும், உபகாரத்தை நினைவூட்டியும், துன்பம் கொடுத்தும் பிறருக்குக் கொடுத்து வீணாக்காதீர்கள். ஏனெனில் இது அல்லாஹ்வின் மீதும் மறுமை மீதும் ஈமான் கொள்ளாதவர்கள் செய்யும் செயலாகும். அவர்களின் ஈமான் பலவீனமானதாகும்; மாறாக, ஈமான் இல்லாததாகும். (2:265 காண்க). எனவே ஈமான் கொள்வதுடன் ஒரு நம்பிக்கையாளர் மற்றவர்களுக்கு பயனுள்ளவராக இருப்பதுடன் அவரும் அதன் இனிய கனிகளை உண்பவராக இருக்கின்றார். உதாரணமாக, ஈமான் கொள்பவர், நற்செயல் செய்பவர்களைப் பற்றி அல்லாஹ் குறிப்பிடும்போது, அவர்கள் மன்னிப்பைப் பெறுவர்; இவர்கள் சுவர்க்கத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவர் என்று கூறுகிறான். பிறகு அல்லாஹ் கூறுகிறான்: ''நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் செய்பவர்களுக்கு நிச்சயமாக அருளாள(னான இறைவ)ன் (ஆழமான) அன்பை ஏற்படுத்துவான்.'' (19:97)

அன்பு என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள அரபுச் சொல் ***உத்(து)*** என்பதாகும். அதன் பொருள், ஆழமான அன்பு, ஆழமான தொடர்பு என்பதாகும். மேலோட்டமான அன்பு, நேசம் அல்ல. ஒருபோதும் அறுந்து விடாத உறுதியான தொடர்பு என்பதாகும். இன்னும் சொல்லப்போனால் ஆணி பூமியில் உறுதியான முறையில் அறைந்தது போன்ற ஆழமான தொடர்பு என்பதாகும். எனவே இந்த வசனத்தின் பொருள், எவர்கள் உறுதியான ஈமான் கொண்டவர்களாகவும், நற்செயல்கள் செய்பவர்களாகவும் இருக்கிறார்களோ அத்தகைய நம்பிக்கையாளர்களின் உள்ளத்தில் அல்லாஹ் தனது அன்பை ஆணியைப் போன்று பதியச் செய்து விடுகிறான். அந்த அளவுக்கு அல்லாஹ்வுடன் நேசம் கொள்பவர்களாக அவர்கள் இருப்பார்கள். பிறகு ஈமானிலும், நற்செயல்களிலும் அவர்கள் முன்னேறிக் கொண்டே செல்வார்கள்.

எனவே ஓர் உண்மையான நம்பிக்கையாளர் இன்னொரு மனிதருக்கு துன்பம் கொடுப்பதைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. மனித குலத்துடன் நேசம் கொள்வது எதிர்பார்ப்பது என்னவெனில், நான் ஏற்கனவே கூறியது போன்று ஓர் உண்மையான நம்பிக்கையாளர் அந்த மனித குலத்திற்கு எப்போதும் நன்மையை எடுத்து வைக்கும் சிந்தனையில் இருக்க வேண்டும். இந்த சிந்தனை முஸ்லிம்களிடம் உருவாகி விட்டால் பிறகு ஒருவர் மற்றவரின் உரிமைகளைப் பறித்தல், அரசாங்களிடமும், பெயர் தாங்கி அமைப்புகளிடமும், பொது மக்களிடமும் காணப்படுகின்ற மற்றவர்களை கொலை செய்வது ஆகிய செயல்கள் ஒருபோதும் காணப்படாது. அல்லாஹ்வின் போதனைப்படி செயல் நடைபெறுவதே இல்லை; எனவேதான் இவையெல்லாம் நடக்கின்றன. ஆனால் கொடுமை எனவென்றால், இவையெல்லாம் அல்லாஹ்வின் பெயரில் நடக்கின்றன. ஆனால் அல்லாஹ்வோ அன்பை, நேசத்தை உருவாக்குங்கள் என்று கூறுகிறான். உள்ளங்களில் ஆழமாக பதியக் கூடிய அன்பை உருவாக்குங்கள் எனக் கூறுகிறான்.

பிறகு வசனத்தில் பொருள் இவ்வாறும் இருக்கலாம்: அதாவது, மனித குலத்தின் உள்ளத்தில் முஸ்லிம்களைப் பற்றிய அன்பு ஆணியைப் போன்று பதிந்து விடலாம். அவ்வாறு செய்வதற்கு அல்லாஹ் நிச்சயமாக ஆற்றல் கொண்டவனாவான். ஆனால் அதனைப் பெறுவதற்கு அல்லாஹ் ஈமானுடன் நற்செயல்களை நிபந்தனை ஆக்கியுள்ளான். முந்தைய நூற்றாண்டுகளில் வாழ்ந்த முஸ்லிம்களிடம் மக்களுக்காக இந்த மாதிரியான அன்பு இருந்தது. அதுதான் கிறித்தவர்களின் உள்ளத்திலும், யூதர்களின் உள்ளத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. எனவே தான் அவர்கள் முஸ்லிம்களின் ஊரை விட்டுச் செல்லும்போது அழுதனர். இன்னும் சொல்லப் போனால் மீண்டும் முஸ்லிம்களின் அதே ஊருக்கு திரும்பி வர வேண்டும் என பிரார்த்தனை செய்தனர். **வரலாறு கூறுவது என்னவென்றால், நாங்கள் உயிரை விட்டு விடுவோம்; ஆனால் கிறித்தவப் படையை நகரத்திற்குள் நுழைய விட மாட்டோம். (முஸ்லிகளாகிய) நீங்கள் இங்கு இருங்கள்; நாங்கள் உங்களைப் பாதுகாப்போம் என்று யூதர்கள் கூறினர்.** ஆக, இதுதான் எல்லா வட்டத்திலும் முஸ்லிம்களிடமிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்த நற்செயல்களின் தாக்கமாக இருந்தது. அது அழகிய மரத்தின் பக்கம் உலகத்தின் கவனத்தை ஈர்த்தது.

இன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை அன்பர் (ஆகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்களு) ருடைய அன்பர்களின் கடமை, ஈமானின் வேர்களை உறுதிப்படுத்துவதுடன் உலகை இஸ்லாத்தின் அழகின் பக்கம் ஈர்க்கக் கூடிய,உலகிற்கு அருளை வழங்கக் கூடிய நற்செயல்கள் எனும் அழகிய இலைகளாக, கிளைகளாக, கனிகளாக மாறுவதாகும். **அல்லாஹ்வுடன் அன்பை உருவாக்கக் கூடியவர்களும் நாமாக இருக்க வேண்டும்; மனித குலத்துடன் அன்பு செலுத்துவதும் நமது முன்னுரிமையாகக் கொண்ட கடமையாக இருக்க வேண்டும். மனித குலத்தை ஈர்ப்பவர்களும் நாமாக இருக்க வேண்டும். ஏனெனில் இது இல்லாமல் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்ததன் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக ஆக மாட்டோம்.** உங்கள் செயல்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ்வின் திருப்திக்கு ஏற்ற - உலகை துன்பத்திலிருந்து காப்பாற்றக் கூடிய சாலிஹான அமலை செய்யுங்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல முறை தமது பல்வேறு எழுத்துக்களில், வழிகாட்டல்களில், கூட்டங்களில் நமக்கு கவனமூட்டி இருக்கிறார்கள். அவர்களின் சில மேற்கோள்களை நான் உங்கள் முன்னால் வைக்கிறேன்:

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:**

''எனது போதனை என்னவோ அதன்படி நீங்கள் செயல்பட வேண்டும். எவர் நமது போதனையை தனது செயல் திட்டமாக ஆக்கிக் கொள்கிறாரோ, தனது தைரியம் மற்றும் முயற்சிக் கேற்ப அதன் படி செயல்படுகிறாரோ அவர்தான் நமது ஜமாஅத்தில் இணைந்தவராவார். ஆனால் எவர் வெறும் பெயரை வைத்துக் கொண்டு போதனைப்படி செயல்படவில்லையோ அவர் நினைவிற் கொள்ளட்டும்: **அல்லாஹ் இந்த ஜமாஅத்தை ஒரு சிறப்பான ஜமாஅத்தாக ஆக்க விரும்பி இருக்கிறான். மேலும் எவர் உண்மையில் ஜமாஅத்தில் இல்லையோ அவர் வெறும் பெயரை எழுதுவதனால் மட்டும் ஜமாஅத்தில் இருக்க முடியாது. அவருக்கு ஏதாவது ஒரு நேரம் வரும். அப்போது அவர் தனியாக சென்று விடுவார்.** எனவே தரப்படுகின்ற போதனைகளுக்கேற்ப உங்கள் செயல்களை இயன்ற அளவுக்கு ஆக்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

செயல்கள் இறக்கைகளைப் போன்றவையாகும். செயல்கள் இன்றி மனிதன் ஆன்மீக படித்தரங்களில் பறக்க முடியாது. மேலும் (செயல்களாகிய) அதன் கீழ் இறைவன் வைத்திருக்கும் அந்த உயர்ந்த நோக்கங்களைப் பெற முடியாது. ஒவ்வொருவரும் அல்லாஹ்வுக்கு அஞ்ச வேண்டும். அல்லாஹ்வைப் பற்றிய அச்சம் அவரை பல நன்மைகளுக்கு வாரிசாக்கி விடும். இறைவனுக்கு அஞ்சுபவரே நல்லவராவார். ஏனெனில் அந்த அச்சத்தினால் அவருக்கு ஓர் அகப் பார்வை கிடைக்கிறது. அதன் மூலமாக அவர் பாவங்களிலிருந்து தப்பிக்கிறார். பலர் அல்லாஹ்வின் அருக்கொடைகள், அருள்கள், கருணைகள் ஆகியவற்றைப் பற்றி சிந்தித்து, நாணம் கொள்பவர்களாக இருக்கிறார்கள். அதனால் அவனுக்கு கட்டுப்படாமையிலிருந்தும், மாறு செய்வதிலிருந்தும் தவிர்ந்திருக்கின்றனர். ஆனால் சிலர் அவனுடைய தண்டனையினால் அஞ்சக் கூடியவர்களும் இருக்கிறார்கள். உண்மை விஷயம் என்னவென்றால், அல்லாஹ்வின் அளவுகோலில் நல்லவராக இருப்பவர்தான் நல்லவர் ஆவார். பலர் தம்மைத் தாமே ஏமாற்றுகின்றனர். தம்மை இறையச்சமுடையவர் எனக் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் எவருடைய பெயர் அல்லாஹ்வின் பதிவேட்டில் இருக்கிறதோ அவர்தான் இறையச்சம் கொண்டவராவார்.

**தற்போது (இவ்வுலகில்) அல்லாஹ்வின் *சத்தாரீ* (குறைகளை திரையிட்டு மறைப்பவன்) என்ற பண்பு வெளிப்பட்டிருக்கிறது. ஆனால் மறுமை நாளில் திரையை விலக்கும் பண்பு வெளிப்படும்போது எல்லா உண்மைகளும் வெளிப்பட்டு விடும். அவ்வாறு வெளிப்படும் நேரத்தில் இன்று மிகவும் இறையசமுடையவராகவும், தூய்மையானவராகவும் தென்படுகின்ற பலர் மறுமை நாளில் தீயவர்களாகவும்,துர்நடத்தையுள்ளவர்களாகவும் காணப்படுவார்கள்.** அதற்குக் காரணம், நற்செயல் என்பது நமது சொந்த திட்டத்தினால், வரையரையினால் நடக்க முடியாது. உண்மையில் எதில் எவ்விதமான யாதொரு குழப்பமும் இருக்காதோ அதுவே நற்செயல் ஆகும்.''

**பிறகு செயலின் தேவையைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்ப மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

'' வெறும் வாயளவில் கலிமாவைக் கூறிவிடுவது போதுமானது என்றும் அல்லது வெறும் ***அஸ்தக்ஃபிருல்லாஹ்*** என்று கூறி விடுவது போதுமானது என்றும் மனிதன் கருதி விடுகிறான். ஆனால் வாயளவிலான வெற்றுப் பேச்சுகள் போதுமானதல்ல என்பதை நினைவிற் கொள்ளுங்கள். **மனிதன் வாயளவில் ஆயிரம் முறை அஸ்தக்ஃபிருல்லாஹ் என்று கூறினாலும் அல்லது நூறு முறை தஸ்பீஹ் ஓதினாலும் அதனால் எந்தப் பயனும் ஏற்படாது. ஏனெனில் இறைவன் மனிதனை மனிதனாகப் படைத்திருக்கிறான்; கிளியாகப் படைக்கவில்லை.** நாவினால் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருப்பதும், ஒன்றும் புரியாதிருப்பதும் கிளியின் வேலையாகும். மனிதனுடைய வேலை,சொல்லுவதை சிந்தித்து சொல்வதாகும். மேலும் அதற்கேற்ப செயல்படுவதுமாகும். ''

இன்னோரிடத்தில் **ஹஸ்ரத் வாக்களிக்கப்ப மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''சொல்லுடன் செயலும் இல்லாத வரை - கைகள், கால்கள், பிற உறுப்புகள் ஆகியவற்றால் செயல்படாத வரைவெறும் வாயளவிலான பேச்சுகளால் எந்தப் பயனுமில்லை; எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்துவதுமில்லை. அல்லாஹ் திருக்குர்ஆனை அனுப்பி நபித் தோழர்களிடமிருந்து தொண்டுகளை வாங்கினான் என்றால் அவர்கள், வாயளவில் சொல்லி விட்டு போதுமானது எனக் கருதினார்களா? அல்லது அதன்படி செயல்படுவது அவசியமானதாகக் கருதினார்களா? அவர்கள் கட்டுப்பட்டனர்; நன்றியுணர்வைக் காட்டினர். ஆடுகளைப் போன்று பலியாயினர். பிறகு அவர்கள் என்ன பெற்றனரோ அதுவும், இறைவன் அவர்களுக்கு எந்த அளவுக்கு மதிப்பளித்தான் என்பதும் மறைமுகமான விஷயமல்ல. **இறைவனின் அருளை, அருட்கொடையைப் பெற விரும்புகிறீர்கள் என்றால் எதையாவது செய்து காட்டுங்கள். இல்லையென்றால் வீணானவற்றைப் போன்று நீங்கள் தூக்கி எறியப்படுவீர்கள்.** எந்த மனிதரும் தனது வீட்டின் நல்ல பொருள்களை தங்கம், வெள்ளியை வெளியே தூக்கி எறிய மாட்டார். மாறாக, அவற்றை அனைத்து பயன்படக் கூடிய, மதிக்கத்தக்க பொருள்களைப் போன்று பாதுக்காத்து வைக்கின்றீர்கள். ஆனால் வீட்டில் ஓர் எலி செத்துக் கிடக்கிறதென்றால் அதை முதலில் வெளியே தூக்கி எறிந்து விடுவீர்கள். அவ்வாறே இறைவன் தனது நல்லடியார்களுடன் எப்போதும் அன்பு செலுத்துகிறான்; அவர்களுக்கு நீண்ட ஆயுளை வழங்குகிறான். அவருடைய வியாபாரங்களில் ஓர் அருளை வைத்து விடுகிறான். அவன் அவர்களை வீணாக்குவதில்லை. அவமரியாதையான மரணத்தை வழங்குவதில்லை. அல்லாஹ்வுக்கு வலி (நேசர்) ஆக மாறுவது எளிதான ஒன்றல்ல. மாறாக, மிகவும் கடினமானதாகும். ஏனெனில் அதற்கு தீமைகளை விட்டு விடுவது, தீய எண்ணங்களையும் உணர்வுகளையும் விட்டு விடுவது அவசியமாகும். மேலும் இது மிகவும் கடினமான வேலையாகும். ஒழுக்கத்தில் உள்ள பலவீனங்களையும் தீமைகளையும் விட்டு விடுவது சில நேரங்களில் மிகவும் கடினமாகி விடுகின்றது. **கொலை செய்பவர் கொலை செய்வதை விட்டு விடலாம்; திருடர் திருடுவதை விட்டு விடலாம். ஆனால் ஒரு தீயவர் தீய பழக்கத்தை விட்டு விடுவது கடினமாகி விடுகிறது. அல்லது ஆணவம் கொண்டவருக்கு ஆணவத்தை விட்டு விடுவது கடினமாகி விடுகிறது.** உண்மை என்னவென்றால், எவர் இறைவனின் மகத்துவத்திற்காக தன்னைத் தானே சிறியவராக ஆக்கிக் கொள்வாரோ இறைவன் அவரை பெரியவராக்கி விடுவான். ஒருவர் தன்னை சிறியவராக்கிக் கொள்ளாத வரை எவரும் பெரியவராக முடியாது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.''

பிறகு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** பைஅத் செய்தவர்களுக்கு கூறினார்கள்:

''மனிதன் பைஅத் செய்த பிறகு இந்த ஜமாஅத் உண்மையானது என்று நம்பினால் மட்டும் போதாது, இதனால் அவருக்கு அருள் கிடைக்கும் என்பதல்ல. செயல் நல்லதாக இருக்காத வரை ஏற்றுக் கொள்வதால் அல்லாஹ் மகிழ்ச்சி அடைவதில்லை. இந்த ஜமாஅத்தில் இணைந்து விட்டீர்கள். இனி நல்லவராகவும், இறையச்சம் கொண்டவராகவும் மாறுவதற்கு முயற்சி செய்யுங்கள். எல்லா தீமைகளிலிருந்தும் விலகுங்கள். நேரத்தை துஆக்களில் செலவிடுங்கள். இரவும் பகலும் மன்றாடலில் ஈடுபட்டுக் கொண்டிருங்கள். சோதனை வரும்போது அல்லாஹ்வின் கோபமும் எழுந்தவாறு இருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில் துஆவிலும், மன்றாடலிலும், தான தருமம்

செய்வதிலும் ஈடுபடுங்கள். நாவை மென்மையாக வைத்திருங்கள். இஸ்திக்ஃபார் எனும் பாவ மன்னிப்புத் தேடுவதை உங்கள் பழக்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள்.தொழுகைகளில் துஆக்களை செய்யுங்கள். வெறும் ஏற்றுக் கொள்வது வேலைக்கு உதவாது. மனிதன் ஏற்றுக் கொண்டு பிறகு அதை முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்து விட்டால் அவருக்கு பயன் படாது. பிறகு பைஅத்தினால் பலன் கிடைக்கவில்லை என்று முறையிடுவது பயனற்றதாகும். இறைவன் வெறும் சொல்லினால் திருப்தி கொள்வதில்லை.''

**பிறகு நற்செயல்களின் பக்கம் கவனமூட்டியவாறு கூறினார்கள்:**

''உங்களிடம் நற்செயல்கள் இல்லாத வரை வெறும் ஏற்றுக் கொள்வது எந்த பயனையும் தராது என்பதை நினைவிற் கொள்ளுங்கள். ஒரு மருத்துவர் மருந்து எழுதிக் கொடுக்கிறார் என்றால் அதன் பொருள் அதை வாங்கி குடிக்க வேண்டும் என்பதாகும். அவர் அந்த மருந்தை பயன்படுத்தவில்லை என்றால் மருந்தை வாங்கி, (பயன்படுத்தாமல்) விட்டு விட்டால் அவருக்கு என்ன பயன் கிடைக்கும்? இப்போது நீங்கள் பாவ மன்னிப்பு தேடியுள்ளீர்கள். இனி இந்த பாவ மன்னிப்பு தேடுவதன் மூலமாக உங்களை நீங்கள் எந்த அளவுக்கு தூய்மைப் படுத்துகிறீர்கள் என அல்லாஹ் பார்க்க விரும்புகிறான். இப்போது இறைவன் இறையச்சத்தின் மூலமாக வித்தியாசப்படுத்த விரும்பும் காலமாகும். இறைவன் மீது முறையீடு செய்யும் பலர் இருக்கின்றனர். அவர்கள் தனது நஃப்ஸைப் பார்ப்பதில்லை. மனிதனுக்கு அவனது நஃப்ஸே அநீதி இழைக்கிறது. மற்றபடி, அல்லாஹ் அருளாளனும் கருணை மிக்கவனுமாவான். ''

**பிறகு இன்னோரிடத்தில் கூறுகிறார்கள்:**

''எவர்கள் இந்த ஜமாஅத்தில் இணைந்து என்னுடன் முரீது எனும் தொடர்பைக் கொண்டிருக்கிறார்களோ அதன் நோக்கம் என்னெவென்றால், அவர்கள் நன்னடத்தை, நேர்மை, இறையச்சம் ஆகியவற்றின் உயர்ந்த படித்தரம் வரை சென்றடைய வேண்டும் என்பதும் எந்த குழப்பமும், தீங்கும், துர்நடத்தையும் அவர்களை நெருங்கக் கூடாது என்பதுமாகும். அவர்கள் ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும்.அவர்கள் பொய் கூறக் கூடாது. அவர்கள் யாருக்கும் நாவினால் துன்பம் கொடுக்கக் கூடாது. அவர்கள் எவ்வித தீய நடத்தையையும் செய்து விடக் கூடாது. எந்த விதமான தீங்கு, அநீதி, குழப்பம் ஆகியவற்றைப் பற்றிய எண்ணத்தைக் கூட உள்ளத்தில் கொண்டுவரக் கூடாது. மேலும் எந்த விதமான விஷமத்தனமான இயல்பும் அவர்களிடம் காணப்படக் கூடாது.''

ஆக, இதுதான் எப்போதும் நாம் முன் நிறுத்த வேண்டிய அறிவுரைகளாகும். இந்த விஷயங்கள்தான் நம்மை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரத்தின் பசுமையான கிளைகளாக மாற வழிவகுக்கும். இதன் மூலமாகவே நமது பைஅத் உடன்படிக்கையின் நோக்கமும் நிறைவேறும். அல்லாஹ் நம்மை உண்மையான நம்பிக்கை கொள்டவர்களைச் சேர்ந்தவர்களாக ஆக்குவானாக.

**Summarized By: Majlis Ansarullah Bharath**

**Translated By: *O.M.Muzzammil Ahmad* For TAMIL Desk**

**Published By Nazarat Nashr-O-Isha'ath Qadian, 143 516, Punjab**